# வேதாகம விளக்கவுரை

1




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# தேவன் உங்களை எதற்காக அனுப்பினாரோ, அதை பிழையின்றி செய்தீர்கள். எனவே, உங்களுக்கு பரலோகத்தில் ஒரு இடம் உண்டாயிருக்கும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# மத்தேயு 5:7

## இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## **செய்தி:** 60-0515E **புத்திரசுவிகாரம் – பாகம் – 1**

---

12. இங்கு அழகான அநேக தாய்மார்கள் அமர்ந்துள்ளனர். அவர்களில் சிலருக்கு அறுபது, எழுபது வயது ஆகிவிட்டது.

அவர்கள், சகோ. பிரான்ஹாமே, நாங்கள் என்னத்தை சாதித்து விட்டோம்?'' என்று கேட்கலாம். நீங்கள் உங்கள் பிள்ளைகளை வளர்த்தீர்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று குறிக்கப்பட்டிருந்ததோ, அதை செய்தீர்கள்.

வயதான தகப்பன்மார்கள் சிலர், நாங்கள் நிலத்தை உழுது பண்படுத்தினோம்.

நாங்கள் அதையெல்லாம் செய்தோம். ஆனால், நாங்கள் பிரசங்கம் செய்ய வில்லை," எனலாம்.

**தேவன் உங்களை எதற்காக அனுப்பி னாரோ, அதை பிழையின்றி செய்தீர்கள். எனவே, உங்களுக்கு பரலோகத்தில் ஒரு இடம் உண்டாயிருக்கும்.**

13. நேற்று ஒரு வயோதிப மருத்துவ நண்பருடன் உரையாடிக் கொண்டிருந் தேன். அவருக்கு எண்பது வயது நிரம்பி விட்டது.

அவருடைய மைத்துனி இன்றிரவு சபைக்கு வந்திருக்கிறாள். அவரைக் குறித்து அவள் சற்று கவலை கொண்டிருந் தாள். எனவே, அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன்.

நான் அவருடன் உரையாடிக் கொண் டிருந்த போது அவருடைய முகம் பிரகாச முற்றது. அநேக ஆண்டுகளுக்கு முன்பு கொலராடோவில் அவர் வேட்டையாடின்

சம்பவம் ஒன்றை என்னிடம் கூறிக் கொண்டிருந்தார். அங்கு தான் நானும் வேட்டைக்குச் செல்கிறேன். அவருடைய முகம் மிகவும் பிரகாசிக்க தொடங்கினது.

நான் அவரிடம், ''எவ்வளவு காலமாக நீங்கள் மருத்துவத் துறையில் இருக்கிறீர் கள்?'' என்று கேட்டேன்.

''நீ பால் குடிக்கும் குழந்தையாயிருந்த முதற்கொண்டே'' என்று அவர் பதிலளித்தார்.

மேலும் அவர், ''அநேகமுறை நான் என் குதிரையில் சேணம் கட்டி, சிகிச்சைக்கு வேண்டியவைகளை தோள் பையில் எடுத்துக் கொண்டு, அதை தொங்கவிட்டுக் கொண்டு சென்றதுண்டு. அநேகமுறை நான் நடந்தும் கூட சென்றதுண்டு'' என்றார்.

நான், ''ஆம், நீரோடைகளின் கரை களில், அதிகாலையில் இரண்டு மணிக்கு, கையில் டார்ச் விளக்கைப் பிடித்து

கொண்டு சென்று வயிற்று வலியால் அவதியுற்ற ஒரு சிறு குழந்தைக்கோ அல்லது பிரசவ வேதனை கொண்டிருந்த ஒரு பெண்ணுக்கோ அவர்கள் வீட்டைத் தேடிக்கண்டு பிடித்து வைத்தியம் பார்த் திருப்பீரே'' என்றேன்.

''அது உண்மை என்றார் அவர்.''

14. **நான், "டாக்டர், அழிவையும் அழியா மையும் பிரிக்கும் அந்த கோட்டிற்கு அப்பால், அவ்விதம் சேவை புரிந்த மருத்துவர் களுகென தேவன் ஒரு இடத்தை வைத்துள் ளார் என்று உங்களுக்கு தெரியுமா?" என்று கேட்டேன்.**

அவருடைய கண்களில் கண்ணீர் மல்கியது. அவர் அழத் தொடங்கினார்.

அவர், தமது பலவீனமான கரங்களை நீட்டி என்னைப் பிடித்து கொண்டு, ''அப்படி இருக்கலாம் என்று நம்புகிறேன்'' என்றார்.

இந்த தேசத்திற்கு அப்பால், தேவன் ஒரு மனிதனின் ஆத்துமாவின் தன்மையை ஆராய்ந்தறிகிறார்.

பின்பு நான் அவருக்கு இந்த திருப்தியளிக்கும் வேதவாக்கியம் ஒன்றை கூறினேன். அநேகமுறை சேறு நிறைந்த வயல்களின் வழியாக இரவில் நடந்து சென்று, யாருக்காகிலும் ஒருவருக்கு உதவி செய்ய முயன்று, அதற்காக காசு வாங்காமல் அவர் இருந்திருக்கக்கூடும். பரவாயில்லை.

**நான் அவரிடம், "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" என்று இயேசு வேதத்தில் கூறியுள்ளார்" என்று சொன்னேன். அது உண்மை.**

“விசுவாசி அண்டசராசரங்கள்
அனைத்துக்கும்
சொந்தமானவனாயிருக்கிறான்’ என்னும்
உரிமை பத்திரத்தை
இயேசுகிறிஸ்துவிடமிருந்து
பெற்றிருக்கிறான்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# மத்தேயு 5:5

## சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

## செய்தி: 62-0506
## சகலத்தையுமுடையவர்களாக இருத்தல்

---

31. **ஓ, இன்றிரவு, நாம் உலகத்தின் பொருட்களால் ஐசுவரியமில்லாதவர்களாய் இருக்கலாம். ஆயினும் நாம் சகலத்தையும் உடையவர்களாய் இருக்கிறோம்.**

**சபை சகலத்தையும் உடையதாயிருக்கிறது.**

**தரித்திரர் என்னப்பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாக இருக்கிறோம். அது எனக்குப் பிரியம்.** அவர் நாம் அப்படியிருக்கிறோம்.

**அநேக ஆண்டுகளுக்கு முன்பு “என் பிதா ஐசுவரியமுள்ளவராய் வீடுகளையும் நிலங்களையும் உடையவராயிருக்கிறார். அவர் உலகத்தின் ஐசுவரியத்தை தம் கரங்களில் பிடித்திருக்கிறார். அவருடைய பொக்கிஷம் செம்பு, இரத்தினம், வெள்ளி, பொன் ஆகியவைகளால் நிறைந்துள்ளது. அவருக்கு சொல்ல முடியாத ஐசுவரியம் உண்டு” என்னும் பாடலை நாம் பாடுவது வழக்கம். நமக்கு அவைகளெல்லாம் சொந்தம். ஏனெனில் நாம் ராஜாவின் புத்திரர். ஆமென். பிள்ளை தகப்பனுடைய உடமைகளுக்கு சுதந்தரவாளி என்று நமக்குத் தெரியும், சரி.**

ஆபிரகாம் அதன் மேல் சொந்தம் பாராட்ட முடிந்தது. ஆயினும் அவன் தரித்திரனாயிருந்தான். அவனுடைய ஆடு மாடுகள் பட்டினியால் தவித்தன.

லோத்து மிகவும் செழிப்பான நிலத்தை எடுத்துக் கொண்டான்.

ஆபிரகாமுக்கு தண்ணீர் குறைவு பட்டது, உஷ்ணமான நாட்கள். ஆடு மேய்ப்பவர்களுக்கு கஷ்டம் உண்டானது. எல்லாமே ஆபிரகாமுக்கு தவறாக நடந்தது போல் தோன்றுகிறது. **இருப்பினும் அவனுக்கு சகலமும் சொந்தமாயிருந்தது.**

32. இன்றைக்கு உண்மையான விசுவாசி ஜனங்களால் தள்ளி விடப்பட்டு, ''மூட மனிதாபிமானி, உருளும் பரிசுத்தன்'' அல்லது அப்படிப்பட்ட நிந்தையான பெயர்களால் அழைக்கப்படுகிறான். அவன் ஏதோ ஒருவிதமான மூட மனிதாபி மானி என்று கருதப்படுகிறான். **இருப்பினும் அவன் வானம் பூமி முழுவதற்கும் சுதந்தரவாளியாயிருக்கிறான்.**

**“சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கிய வான்கள்; அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்”.**

ஓ, என்னே நீங்கள் சிறு குடிலில் வாழ்ந்து, உங்கள் வாடகையை செலுத்த போதிய பணமில்லாதவர்களாயிருந்தும் சகலத்துக்கும் சொந்தமானவர்களாயிருக்கிறீர்கள். ஆமென்.

சில காசுகள் சம்பாதிக்க வியர்க்க வியர்க்க கடினமாக உழைத்து... நேர்மையான வாழ்க்கை வாழ்ந்து, உங்கள் பிள்ளைகளுக்கு காலணிகளை வாங்கித் தந்து, பசியாயுள்ளவர்களின் வாய்களுக்கு உணவு கொடுக்கிறீர்கள். **ஆயினும் நீங்கள் எல்லாவற்றிற்கும் சொந்தமானவர்களாய், இங்குள்ள அனைத்துக்கும் சுதந்தரவாளியாயிருக்கிறீர்கள்.**

**"சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். "ஓ, என்னே, அது எனக்கு பிரியம் ! பூமியை உடையவன். அது யார்? விசுவாசி.**

‘‘விசுவாசி அண்டசராசரங்கள் அனைத்துக்கும் சொந்தமானவனாயிருக்கிறான்’ என்னும் உரிமை பத்திரத்தை இயேசு கிறிஸ்துவிடமிருந்து பெற்றிருக்கி றான். அது உண்மை.

‘‘சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்’’



# இருப்பினும் நீங்கள் ஒவ்வொரு அங்குலமும் போராட வேண்டியதாயுள்ளது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# மத்தேயு 5:5

## சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: 62-0506
## சகலத்தையுமுடையவர்களாக இருத்தல்

---

33. ஆபிரகாம் அந்த தேசத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் தனக்குச் சொந்தமாக பெற முடிந்தது. தேவன் அதை அவனுக்குக் கொடுத்தார். லோத்து அந்த தேசத்தின் ஒரு பாகமாயிருந்தான். எனவே ஆபிரகாமுக்கு அதன் பேரிலும் உரிமையிருந்தது. அவன் அதன் மேல் உரிமை பாராட்ட முடியும். அவன், "இப்பொழுதும் தேவனே, இந்த தேசமும் இதிலுள்ள அனைத்தும் எனக்குச் சொந்தமானவை என்று நீர் வாக்களித்தீர். என் உறவினன் சிறைபிடித்து கொண்டு போகப்பட்டான்.

அவனுக்கிருந்த எல்லாமே போயிவிட்டது'' என்றான். இந்த நாளுக்கு இதை பொருத்துவோமானால், சபையானது, ''கர்த்தராகிய தேவனே, இதோ என் சகோதரன், அவர் புற்று நோயால் பீடிக்கப் பட்டு கிடக்கிறார், அவர் காசநோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு இன்னின்னது உள்ளது. நான் வாக்குத் தத்தத்தை பற்றிக்கொள்கிறேன். அது என்னுடையது. நீர் அப்படி சொல்லியிருக் கிறீர்'', என்று சொல்லமுடியும். ஆமென்! பார்த்தீர்களா? அதன் பிறகு நீங்கள் சத்துருவாகிய பிசாசை துரத்தி, ஆபிரகாம் எப்படி ராஜாக்களை முறியடித்து, சகல பொருட்களையும் திருப்பிக்கொண்டு வந்தானோ, அப்படியே நீங்களும் செய்ய முடியும். ஆமென். அது எனக்குப் பிரியம். அது விசுவாசிக்கு அருளப்பட்டுள்ளது.

34. **ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தின் பேரில் உரிமையிருந்தது. வாக்குத்தத்தம் அவனுடையதாயிருந்த போதிலும், அதைப்**

**பெற்றுக்கொள்ள அவன் போராட வேண்டி யிருந்தது.** ஆமென். பார்த்தீர்களா?

**இன்றைய விசுவாசி நாம் சகலத்துக்கும் சுதந்தரவாளியாயிருக்கிறோம். எல்லாவித ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கும், எல்லா வித சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களுக் கும், வேதம் வாக்களித்துள்ள ஒவ்வொரு ஆசீர்வாதத்துக்கும் நாம் சுதந்தரவாளி யாயிருக்கிறோம். இருப்பினும் நீங்கள் ஒவ்வொரு அங்குலமும் போராட வேண்டிய தாயுள்ளது. அப்படித்தான் தேவன் அதை நியமித்திருக்கிறார். அது எக்காலத்தும் அவ்வாறே இருந்து வந்துள்ளது.**

**உங்களுக்கு சொந்தமானது என்று நீங்கள் அறிந்துள்ளதை பெற்றுக் கொள்ள நீங்கள் போராட வேண்டும். அதைத்தான் நாம் இப்பொழுது செய்ய வேண்டியவர்களா யிருக்கிறோம்.**

35. **நீங்கள், 'சகோ. பிரன்ஹாமே, எனக்கு சுகம் தேவை எனலாம். வாக்குத்**

**தத்தம் உங்களுடையது. ஆனால் அதை நீங்கள் எளிதில் பெற முடியாது என்று உங்களுக்கு சொல்லுகிறேன். அதை சாத்தானிடத்திலிருந்து நீங்கள் பறித்துக் கொள்ள வேண்டும்.** சாத்தான் உங்கள் ஆரோக்கியத்தை கைப்பற்றிக் கொள்கி றான்.

நீங்கள் சாத்தானிடம் சென்று, "அதை எனக்குத் திரும்பக் கொடுத்து விடு. நான் வானத்துக்கும் பூமிக்கும் சொந்தமானவ ரான கர்த்தரின் நாமத்தில் வருகிறேன். நான் அவருடைய சுதந்தரவாளி. திரும்பக் கொடுத்து விடு என் பிள்ளையை நீ எடுத்து, அவள் தவறான பையனுடன் பழகும்படி செய்துவிட்டாய். என் பையனை நீ எடுத்து, தவறான பெண் ணுடன் பழகும்படி செய்துவிட்டாய். அவர்களை நான் உரிமை கோருகிறேன் என் பிள்ளைகளை நான் உரிமைகோரு கிறேன். என் சகோதரனை நான் உரிமை

கோருகிறேன். என் சகோதரியை நான் உரிமை கோருகிறேன். ஆம், சாத்தானே, அவர்களிடம் நயமாய் பேசி, தேவனுடைய வீட்டிலிருந்து அவர்களை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டாய். அவர்களுக்குப் பின்னால் நான் வருகிறேன். அவர்களை உரிமை கோருகிறேன், என்று சொல்ல உங்களுக்கு உரிமையுண்டு. ''நல்லது, உனக்கு எப்படித் தெரியும்?'' ''நான் சகலத்துக்கும் சுதந்தரவாளி. ஆமென். அது எனக்குக் கொடுக்கப்பட்டது. நான் சுதந்தரவாளி. தேவன் எனக்கு வாக்களித்துள்ள அனைத்தின் மேலும் நான் உரிமை பாராட்ட முடியும்''. ஆமென். பார்த்தீர்களா? என்னே!

இன்றைய உங்கள் சாட்சி இந்நகரத்துக்கு விரோதமாய் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வரும், பரிசுத்த ஆவியின் அபிஷேகம், தேவனுடைய வல்லமை, பரிசுத்த வாழ்க்கை இவைகளைக் குறித்து நாம் கொண்டிருக்கும் சாட்சி இந்நகரத்துக்கு விரோதமாய் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வரும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# மத்தேயு 5:8

## இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

## செய்தி: 59-1217 பரிசுத்த ஆவி எதற்காக அருளப்பட்டது?

---

58. தேவனுக்கு ஒரு கூட்டம் ஜனங்கள் உள்ளவரைக்கும், தேவனுக்கு ஒரு சபை உள்ளவரைக்கும், அதனுடன் பரிசுத்த ஆவி அணிவகுத்து செல்லும்படி தேவன் செய்கிறார். அதற்காகத்தான் தேவன் பரிசுத்த ஆவியை அருளினார்.

படித்த மேதைகள் எழும்புவார்கள், அவர்கள் எப்பொழுதும் எழும்புவார்கள்.

**ஆனால் தேவனுக்கு எங்கோ ஓரிடத்தில் சிறுபான்மையோர் இருப்பார்கள்.** அந்த வெளிச்சத்தை உரிமைகோர, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று முன்செல்ல தேவனுக்கு ஒரு சிறு சபை உள்ளது.

இவர்கள்தாம், தங்கள் சாட்சியின் மூலம், உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள்.

**"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" என்று வேதம் கூறவில்லையா, இயேசு கூறவில்லையா? (மத்: 5:8) மற்றுமொரு வேதவாக்கியம், பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள் என்று கூறுகிறது அல்லவா? (Iகொரி: 6:2) நிச்சயமாக.**

**இன்றைய உங்கள் சாட்சி இந்நகரத்துக்கு விரோதமாய் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வரும், பரிசுத்த ஆவியின் அபிஷேகம், தேவனுடைய வல்லமை, பரிசுத்த வாழ்க்கை இவைகளைக் குறித்து நாம் கொண்டிருக்கும் சாட்சி இந்நகரத்துக்கு விரோதமாய் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வரும்.**

# உன் கணவர் உன் கற்புள்ள வாழ்க்கையைக் கவனிப்பார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# மத்தேயு 5:13

**நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.**



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

## செய்தி: 64-0823E கேள்விகளும் பதில்களும் (COD 2:20)

42. கேள்வி: **அன்புள்ள சகோ. பிரான்ஹாமே, ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்பு தேவன் என்னைச் சந்தித்து அன்பின் வரம் என்னவென்பதை எனக்கு வெளிப்படுத்தினார். அன்று முதல் அதற்கு நான் திரும்ப வேண்டும் என்பதே என் ஜெபமாயுள்ளது. நான் மரிக்கும் முன்பு அதைப் பெற்றுக்கொள்வேனா? என் கணவர் வார்த்தைக்கு செவிகொடுப்பாரா, நான் என்ன செய்ய வேண்டும்?**

அது ஒரு நல்ல கேள்வி. இப்பொழுது, அவள் கூறியிருக்கிறாள். இங்கு, என்ன சொல்லப்பட்டிருக்கிறது? அவள் “என்

கணவர்" என்று கூறியுள்ளதால், அதைக்கூறினது ஒரு ஸ்திரீயாக இருக்க வேண்டும். இப்பொழுது, அவள் ஆதியில் கொண்டிருந்த அன்பை இழந்துவிட்டாள். பாருங்கள்? அவள் ஆவியில் குளிரடைந்து விட்டாள்.

**இப்பொழுது, சகோதரியே, நீ இன்னும் சபைக்கு வந்து கொண்டிருந்து, சரியான காரியத்தைச் செய்து கொண்டிருக்கிற படியால், உன் இரட்சிப்பை நீ இழந்து போகவில்லை, ஆனால் உன் இரட்சிப்பின் சந்தோஷத்தை தான் இழந்து போயி ருக்கிறாய்.**

ஒரு முறை தாவீது, "உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தை திரும்பவும் எனக்குத் தாரும்" என்று கதறினான் (சங்.51:12).

**நீ இன்னும் கிறிஸ்தவளாகத்தான் இருக்கிறாய் எனவே நீ என்ன செய்ய வேண்டுமென்றால், சகோதரியே, உனக்குத்**

தெரிந்த வரைக்கும் எல்லாவற்றையும் புறம்பாக்கிவிட்டு, தேவனை தேடி ஜெபம்பண்ணு.

“என் கணவர் வார்த்தைக்கு செவி கொடுப்பாரா, நான் என்ன செய்ய வேண்டும்?” இன்று காலை கூறினது போல, உப்புத்தன்மை கொண்டவளாயிரு. “நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்.

உன் கணவர் உன் கற்புள்ள வாழ்க்கையைக் கவனிப்பார்.

அவிசுவாசியான புருஷன் விசுவாச முள்ள தன் மனைவியினால் கர்த்தருக்கு பரிசுத்தமாக்கப்படுகிறான்.

கர்த்தரைத் தேடி, தாழ்மையுடன் இருந்து, எல்லா நேரத்திலும் ஜெபம் செய்து, தேவனுக்கு துதியைச் செலுத்தி, உன் கணவர் தற்போதைய நிலையில் உன்னுடன் வாழ சித்தம் கொண்டுள்ள

வரைக்கும் அவருடன் தயவாய் நடந்துகொள்.



**கிறிஸ்தவ மார்க்கம் என்பது நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என்பதல்ல, நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள், என்ன செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. அது ஒரு உதாரணம். நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்**



**சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து**

## மத்தேயு 5:13

**நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.**



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: 64-0830M கேள்விகளும் பதில்களும் #3

---

46. இதை நான் கூறப் போகிறேன். சில நிமிடங்களுக்கு முன்பு ஒரு நபரை நான் உற்று நோக்கினேன். அன்றொரு நாள் அவர் ஒரு அருமையான வாலிபனைக் குறித்து விசாரித்துக் கொண்டிருந்தார்.

நாங்கள் அணில் வேட்டையாடிக் கொண்டிருந்தோம். அன்று காலையில் எனக்கு ஐந்து அணில்கள் கிடைத்தன. இன்னும்ஒன்றைப் பெற நான் பிற்பகல் வரைக்கும் காத்திருக்கலாம் என்று எண்ணினேன்.

கென்டக்கி நாட்டில் நீங்கள் ஆறு அணில்களை மட்டுமே சுட்டு எடுத்துக் கொள்ளலாம்; அதுதான் அங்குள்ள வரம்பு.

எனவே இந்த குறிப்பிட்ட நபர் என்னிடம், "எனக்கு ஒன்பது அணில்கள் கிடைத்தன" என்றான். கிறிஸ்தவ வாலிபன், நல்ல பையன்.

நான் அவனிடம், "நீ செய்தது தவறு" என்றேன்.

அவன், "நல்லது..." என்றான்.

நான், "இன்று காலையில் எனக்கு ஐந்து அணில்கள் கிடைத்தன. ஒன்றை நான் பிற்பகல் வரைக்கும் விட்டு வைத்தேன். அந்த ஒரு அணிலை நான் சுட்டு வீழ்த்திவிட்டு, மரத்தின் மேல் பார்த்த போது, அங்கு ஐந்து அல்லது ஆறு அணில்கள் உட்கார்ந்து கொண்டிருப்பதை என்னால் எண்ண முடிந்தது– அவைகளை நான் கண்ணால் பார்த்தேன். ஆனால்

அவைகளை விட்டு விட்டு நான் நடந்து சென்று விட்டேன். அண்மையில் இங்கு நான் நடந்து சென்று கொண்டிருந்த போது ஏறக்குறைய பதினைந்து அல்லது இருபது அணில்கள் அங்கு உட்கார்ந்து கொண் டிருப்பதைக் கண்டேன். நான் வரம்பு வரைக்கும் பெற்றுக் கொண்டு, மீதியான வைகளை விட்டு விட்டு, அங்கிருந்து நடந்து வந்து விட்டேன். இந்த நாட்டுக்கு நான் வந்து, பையன்களாகிய உங்களிடம் நான் பிரசிங்கிக்கும் போது, ஜனங்களாகிய நீங்கள் அது உண்மையென்று நம்புகி றீர்கள். நான் வாழும் வாழ்க்கை உங்களுக்கு உதாரணமாயிருக்க வேண்டும்" என்றேன்.

**கிறிஸ்தவ மார்க்கம் என்பது நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என்பதல்ல, நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள், என்ன செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. அது ஒரு உதாரணம். நீங்கள் பூமிக்கு உப்பா யிருக்கிறீர்கள்.**

நான் அந்த பையனிடம், “சட்டம் என்ன கூறுகிறதென்றால் .... இயேசு, 'இராயனுடையதை இராயனுக்கு செலுத்து' என்றார். நீ வேகம் சட்டத்தை மீறினால் என்ன செய்கிறாய்? நீ தவறு செய்கிறாய்; நீ பாவம் செய்கிறாய். இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்து” என்றேன்.

நீங்கள், “நல்லது, அந்த சட்டம் தவறு” எனலாம். அது தவறாயிருந்தால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. இயேசுவின் கட்டளையை மீறுவது தவறாகும். நீங்கள் இராயனுடையதை இராயனுக்கு செலுத்தாமல் போனால், நீங்கள் செய்யக் கூடாது என்று இயேசு உங்களிடம் சொன்னவைகளை நீங்கள் செய்கின்றவர்களாயிருப்பீர்கள். அப்பொழுது பாவத்தின் கட்டளையை மீறினவர்களாயிருப்பீர்கள். அது சரியா? நாம் எல்லோருமே குற்றவாளிகளாயிருக்கிறோம்; அதை நாம் செய்கிறோம். ஆனால் நீங்கள் தவறு

செய்கிறீர்கள் என்று காணும் போது, அதை நிறுத்தி விடுங்கள். ஜனங்கள் உங்களை கவனித்துக் கொண்டிருக்கின்றனர். ஜனங்கள் சபைக்குச் செல்ல மாட்டார்கள், ஆனால் அவர்கள் உங்களை எடை போட்டு நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை பார்த்துக் கொண்டிருப்பார்கள்.



# நீ சாரமாயிரு, அவர்கள் தாகமாயிருப்பார்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# மத்தேயு 5:13

நீங்கள் பூமிக்கு
உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது
சாரமற்றுப்போனால், எதினால்
சாரமாக்கப்படும்? வெளியே
கொட்டப்படுவதற்கும், மனுஷரால்
மிதிக்கப்படுவதற்குமே ஒழிய
வேறொன்றுக்கும் உதவாது.



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

## செய்தி: 55-0724 மயக்கியிழுக்கும் ஆவிகள்

---

45. **உணர்ச்சிவசப்படுதல் மற்றும் அதைப் போன்று இருக்கின்ற அநேக மக்களின் மத்தியில், பின்புறமாக பேசுதல், சண்டைகள், பின்னிக்கொள்ளுதல்கள் மற்றும் எல்லா விதமான தேவனற்ற காரியங்களும் காணப்படுவதை நாம் பார்க்கலாம்.**

**சகோதரனே, அது சபையில் கந்தக அமிலம் போன்றதாகும். அது பிசாசின் வல்லமை.**

ஆண்கள் மற்றும் பெண்களின் ஆவி ஒருவருக்கொருவர் மத்தியில் சென்று,

அதை புறம்பே தள்ளி, ''இது சரியல்ல, இது சரியல்ல, அது சரியல்ல'' என்று கூறுகின்றது.

நீங்கள் பார்க்கப் போனால், பத்தில் ஒன்பது அந்த நபர் தான் கிளர்ச்சியை உண்டு பண்ணிக் கொண்டிருப்பார், அது சரியல்ல. ஆமென்.

சகோதரர் மத்தியில் பிரிவினையை தேவன் வெறுக்கிறார்.

நீங்கள் பயபக்தியாகவும், பரிசுத்த மாயும், தேவனை நேசித்து, அவர் பேரில் தரித்திருங்கள். உங்கள் ஜீவியமானது வேதாகமத்துடன் இணைந்து, சுத்தமான இருதயத்துடனும், சுத்தமான எண்ணத்துட னும், உன்னுடைய சகோதரனுக்கு அன்பைச் செலுத்தி, தேவனுடைய ராஜ் ஜியத்தை இன்னுமாக உயர்த்திக் காட்ட உன்னாலான சிறந்த முயற்சியை செய்தும் மற்றும் அப்படிப்பட்ட காரியங்களைச் செய்தும், சரியாக ஆடையுடுத்தி, சரியாக

ஜீவித்து, சரியானதை பேசி, சரியான இடங்களுக்கு சென்றுக் கொண்டிருந்தால், அப்படியானால் நீங்கள் விரும்புகின்ற எல்லா உணர்ச்சிகளையும் கொண்டிருக் கலாம், அப்பொழுது எல்லாரும் அதை விசுவாசிப்பார்கள்.

**இயேசு, "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக் கிறீர்கள், உப்பானது சாரமற்றுப் போனால், இனிமேல் வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய அது வேறொன்றுக்கும் உதவாது. நீ உப்பாயிருந் தால் மட்டும் ஒரு நன்மையுமில்லை. ஆனால் நீ அதனுடன் சாரத்தைப் பெற்றிருப்பாயா னால் நீ சாரமாயிருப்பாய்** (salty)**. அப்பொழுது உலகம் தாகமுடையதா யிருக்கும்.**

நீ சாரமாயிரு, அவர்கள் தாகமாயிருப் பார்கள். ஓ, என்னே

நீங்கள் உப்புத்தன்மை கொண்டவராயிருங்கள். தாகமடைவதற்கு அங்கு ஏதாகிலும் இருக்குமானால் அவள் தாகமடைவாள். இல்லையென்றால், இதை ஞாபகம் கொள்ளுங்கள், உங்களுக்குத் தவறான நபர் இருந்தால், ஆயிர வருட அரசாட்சியின் போது சரியான ஒன்று கிடைக்கும். நீங்கள் தொடர்ந்து சென்று கொண்டேயிருங்கள். எல்லா தவறுகளும் அங்கு சரியாக்கப்படும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-30 M கேள்விகளும் பதில்களும் COD #21

---

330. **சகோ.பிரான்ஹாமே, நான் வார்த்தையில் நிலை நின்று, அதே சமயத்தில் என் மனைவிக்காக நான் உண்மையில் அக்கறை கொண்டிருக்கிறேன் என்பதை எவ்வாறு அவளுக்குக் காண்பிக்க முடியும்? ஏனெனில் "நீ விசுவாசிப்பதை அல்லது பிரசங்கிப்பதை ஏன் செயல்படுத்தக் கூடாது?" என்னும் கேள்வி எழுந்துள்ளது.**

114. நல்லது, இந்த கேள்வி கேட்டது. உங்கள் மனைவியானால், அதைக் கேட்க அவளுக்கு எல்லா உரிமையுமுண்டு, நீங்கள் உங்களை சரிபடுத்திக் கொள்வது நலம். பாருங்கள்? ஆனால் அவள் பொல்லாதவளாய் இருக்க இதைக் கூறுவாளானால், "இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறதைப் பார்க்கிலும், உன்னுடைய கழுத்தில்

எந்திரக் கல் கட்டப்பட்டு, நீ சமுத்திரத்தில் தள்ளுண்டு போவது உனக்கு நலமாயிருக்கும்." (லூக்.17:2). இப்பொழுது, அதுதான் உங்கள் கேள்வி.

115. ஒருக்கால் இந்த மனைவி அந்த விதமானவளாய் இல்லாமல் இருக்கக்கூடும். அவள் ஒருக்கால் வித்தியாசமானவளாய், நல்லவளாய் இருக்கக் கூடும். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று பார்க்க அவள் உங்களை பரிசோதிக்கக்கூடும்.

116. இப்பொழுது நீங்கள் அவளுடன் அன்பில் நிலைத்திருங்கள், அவள் இயேசுவை உங்களில் காணட்டும். அப்படிச் செய்யுங்கள். பாருங்கள்? நீங்கள் தொடர்ந்து செல்லுங்கள். சில... இக்காலையில் ஒரு நபரைக் குறித்து ஒரு சிறு விவரணத்தை அளிக்க விரும்புகிறேன்.... ஒரு சமயம் இந்த ஸ்திரீ பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டாள்.

அவள் மிகவும் இனியவள். அவர்கள்... அவள் சொன்னாள். நல்லது, அவளுடைய வாழ்க்கை கடுமையாயிருந்தது. அவளுடைய கணவன் ஒரு குடிகாரன். எனவே, அவள் தொடர்ந்து சகித்துக் கொண்டே வந்தாள். அவன், “தேனே, சபைக்குச் செல்ல விரும்பினால், போய் வா. நான் ப்ரவுன் டெர்பி மதுக்கடைக்கு சென்று வருகிறேன். நீ போய் விட்டு வா" என்பான். எனவே அவர்கள் இவ்விதம் வாழ்க்கை நடத்தி வந்தனர். இந்த மதுக்கடை முன்பு போனிஃப்பர் என்று அழைக்கப்பட்டது. பழங் காலத்தவராகிய உங்களில் அநேகருக்கு மூலையில் இருந்த போனிப்பர் ஞாபகமிருக்கும். இப்பொழுது அது ப்ரவுன் டெர்பி என்று அழைக்கப்படுகிறது. அப்படித்தான் என்று நினைக்கிறேன்.

117. அந்த மதுக்கடையில் அவன் குடித்துக் கொண்டிருக்கும் போது, முதலாவதாக என்ன தெரியுமா, ஒரு இரவு

சபையைக் குறித்தும் கிறிஸ்தவர்களைக் குறித்தும் ஒரு கேள்வி எழுந்தது. அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த குடிகாரர்களில் ஒருவன், “இனிமேல் கிறிஸ்தவர்கள் என்று யாரும் கிடையாது. அப்படி யாருமே கிடையாது. இந்த கூட்டம் அனைத்தும் மாய்மாலக்காரரே: அவர்கள் இங்கு புகைபிடித்துக் கொண்டும் குடித்துக் கொண்டும், நாம் செய்கிறதையே செய்து கொண்டு தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்கின்றனர். அப்படி யாருமே கிடையாது” என்றானாம்.

118. இந்த குடிகாரன் உடனே எழுந்து நின்று, "ஒரு நிமிடம் பொறு. எனக்குத் தெரிந்த அப்படிப்பட்ட ஒருத்தி இருக்கிறாள்" என்றானாம்.

அவர்கள், "அது யார்" என்று கேட்க,

அவன் “அது என் மனைவி என்றானாம். பாருங்கள்? அவள் உப்புத் தன்மை கொண்டவளாயிருந்தாள். அவன்

அதை எந்நேரமும். கிரகித்துக் கொண்டே வந்தான்.மற்ற குடிகாரன், “அவளுக்கு இறுக்கம் நேரிட்டால், நான் பந்தயம் கட்டுகிறேன், அவள் கிறிஸ்தவளாக இருக்க மாட்டாள்" என்றானாம்.. .

இவனோ, “இல்லை, அவள் அப்பொழுதும் கிறிஸ்தவளாயிருப்பாள்; அதை நான் நிரூபித்துக் காட்டுகிறேன். நாம் என்ன செய்யலாம் என்று சொல்லுகிறேன். நாம் வீட்டுக்குப் போவோம், அவள் கிறிஸ்தவளா இல்லையா என்பதைக் காண்பிக்கிறேன். நாம் வீட்டுக்குச் சென்று குடித்தவர்களைப் போல் நடிப்போம்” என்றானாம். அவன் வீட்டுக்கு சென்று கதவைத் தட்டினான். எல்லோருமே தள்ளாடிக் கொண்டு உள்ளே வந்தனர். அவன், "நீங்கள் ஏன் இப்படி சுற்றிலும் உட்காரக் கூடாது?" என்று விருந்தாளிகளைப் பார்த்துக் கேட்டு, அவர்களை மிகவும் அன்பாக வரவேற்றான். அவன், மனைவியிடம்,

"எங்களுக்கு இரவு உணவு சமைத்து தா. எங்களுக்கு பன்றி இறைச்சியும் (h a m) முட்டைகளும் வேண்டும்” என்றான். வீட்டில் இவை உண்டு என்று அவன் அறிந்திருந்தான். எனவே அவள் பன்றி இறைச்சியும் முட்டைகளும் சமைத்துக் கொண்டு வந்தாள். அவன் மேசையின் அருகில் வந்து அவர்களைப் பார்த்து விட்டு, அவனுடைய தட்டை எடுத்து அதில் வைக்கப்பட்டிருந்த உணவை தரையில் ஓங்கியடித்து, “இந்த விதமாக முட்டைகளை சமைத்தால் எனக்குப் பிடிக்காது என்று உனக்குத் தெரியுமல்லவா? வாங்கள், இங்கிருந்து போவோம்" என்று தன் சகாக்களைப் பார்த்துசொன்னான்.

119. அவர்கள் வெளியே சென்று அங்கு உட்கார்ந்து கொண்டனர். அவள் வெளியே வந்து, "அன்பே, நான் வருந்துகிறேன். அதை நான் சரியாக சமைக்கவில்லை. நான் வேறு

முட்டைகளை சமைத்து கொண்டு விடுகிறேன்" என்றாள்.

120. அவன், "ஓ, முட்டாள்தனம், அந்த விதமாக முட்டைகளை சமைப்பது எனக்கு பிடிக்காது என்று உனக்குத் தெரியுமே" என்று இவ்விதமாக அவளைத் திட்டிக் கொண்டேயிருந்தான். அவர்கள் அங்கு வெளியே உட்கார்ந்து கொண்டு குடித்தவர்களைப் போல் நடித்துக் கொண்டிருந்தனர். அவள் தன்னையே கண்டனம் செய்து கொண்டு, மிருதுவான குரலில்,

இயேசு சிலுவையை தனியே சுமந்து உலகிலுள்ள அனைவரும் சும்மாயிருக்க வேண்டுமா? ஒவ்வொருவருக்கும் ஒரு சிலுவையுண்டு எனக்கும் ஒரு சிலுவையுண்டு

மரணம் என்னை விடுவிக்கும் வரைக்கும் பிரதிஷ்டை செய்யப்பட்ட இந்த சிலுவையை சுமப்பேன் .

என்று பாடிக் கொண்டிருந்தாளாம். ஒரு குடிகாரன் மற்றொரு குடிகாரனைப் பார்த்துக் கொண்டு, "அவள் உண்மையில் கிறிஸ்தவள், அவள் அதை பெற்றிருக்கிறாள்" என்றானாம். அந்த ஸ்திரீ அவளுடைய கணவனையும் அங்கிருந்த மற்ற அனைவரையும் கிறிஸ்துவினிடம் அன்றிரவு வழிநடத்தினாள். பார்த்தீர்களா? ஏன்? பாருங்கள்? உண்மையில் இனியவராயிருங்கள். இதை ஞாபகம் கொள்ளுங்கள், அதைக் குறித்து அவருக்கு எல்லாம் தெரியும்.

121. எனவே, சகோதரியே, அல்லது சகோதரனே, அது சகோதரன் தான். ஏனெனில் இங்கு தன் மனைவியைக் குறித்து அவர் கேட்டிருக்கிறார். **நீங்கள் உப்புத்தன்மை கொண்டவராயிருங்கள். தாகமடைவதற்கு அங்கு ஏதாகிலும் இருக்குமானால் அவள் தாகமடைவாள்.**

**இல்லையென்றால், இதை ஞாபகம் கொள்ளுங்கள், உங்களுக்குத் தவறான நபர் இருந்தால், ஆயிர வருட அரசாட்சியின் போது சரியான ஒன்று கிடைக்கும். நீங்கள் தொடர்ந்து சென்று கொண்டேயிருங்கள். எல்லா தவறுகளும் அங்கு சரியாக்கப்படும்.**

---



# ஆனால் நீங்கள் மற்றும் நான், இன்றிரவு அது சம்பவிக்கப் போவது போல நாம் ஜீவிப்போமாக



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

~ 2 ~

# மத்தேயு 5:8

## இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

# செய்தி: 62-0527 கேள்விகளும் பதில்களும்

---

51. நான் உங்களிடம் மனம்விட்டு பேச வேண்டுமென்று விரும்பினேன், எப்படியாயினும் நான் அதை கூறுவேன் என்று விசுவாசிக்கிறேன். வேத வசனத்தோடே ஒரு குறிப்பையும் நான் இங்கே எழுதி வைத்திருந்தேன், அது... அப்படி இல்லையென்றால், முடிவு கால சுவிசேஷகம் என்பதன் பேரில், முடிவு கால சுவிசேஷகம் என்றால் என்ன என்பதைக் குறித்து பேசுவதாக இருந்தேன். இன்னொரு நாளிலே அதை பேச நான் வைத்து விடுகிறேன். என் இருதயத்திலிருந்து, என் இருதயத்தின்

ஆழத்திலிருந்து உங்களிடம் பேச நான் விரும்புகிறேன். நான் கருத்துக்களின் நடுவில் இருக்கிறேன், எந்த வழியாக திரும்புவது என்பது எனக்குத் தெரியவில்லை. உங்கள் ஜெபம் எனக்குத் தேவை. நான் உங்களிடம் சில நிமிடங்கள் பேசுவதற் கான தருணத்தைப் பெறுவதற்காகவே. உங்களிடம் நயமாக இக்காரியங்களைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறேன். உங்களிடம் வேறொரு காரியத்தை கூற நான் விரும்புகிறேன், பாருங்கள். நாம் ஏதோ ஒன்றிற்கு மிக அருகாமையில் இருக்கிறோம் என்று நான் உணருகிறேன். இப்பொழுது, நீங்கள் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம், அதைச் செய்ய வேண்டாம். பாருங்கள்?

52. அன்றொரு நாள் என்னிடம் ஒரு மனிதன் வந்து, என்னை மிகவுமாக வருத்தமாய் உணரும்படிக்குச் செய்தார். (“நிச்சயமாக நான் போதனை செய்யும்

போது அந்த விதமாக தெளிவற்ற விதத்தில் நான் பேசவில்லையே'' என்று நான் எண்ணினேன். பாருங்கள்?) அவர், ''சகோதரன் பிரன்ஹாம், குறிப்பிட்ட நாட் களுக்கு பிறகு எனக்கு அறுவை சிகிச்சை செய்யப்படவுள்ளது, அடுத்த பதினைந்து, இருபது நாட்களுக்குப் பிறகு" என்று கூறினார். மேலும், ''இயேசு இங்கிருப்பார், ஆதலால் எனக்கு அந்த அறுவை சிகிச்சையும் தேவைப்படாது என்று நீங்கள் நினைக் கிறீர்களா?'' என்றார். பாருங்கள்? நீங்கள் பாருங்கள், நீங்கள் அதை தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். அவ்வாறு செய்ய வேண்டாம்! பாருங்கள், அவ்விதமாகச் செய்ய வேண்டாம். ஒருக்கால் இன்னும் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு இயேசு வராமலிருக்கலாம். எனக்குத் தெரியாது. ஆனாலும் இன்னுமாக இன்றிரவே அவர் இங்கு இருக்கலாம். அவர் நாளையும் கூட வரலாம். அவர் எப்பொழுது

வரப்போகிறார் என்று எனக்குத் தெரியாது, அது எவருக்குமே தெரியாது. வெளிப்படையாகக் கூறுவோமானால், அவருக்கே அது தெரியாது. அவ்வாறு தான் அவர் கூறுகிறார். அது யாருக்குமே தெரியாது. அவர் வருவார் என்று பவுல் அவருக்காக ஒவ்வொரு நாளும் காத்திருந்தான் என்பது உங்களுக்குத் தெரியுமா? பத்மூ திவிலிருந்த யோவான் அதைக் காணும்படிக்கு உயிர்வாழ்வான் என்று நினைத்திருந்தான். நிச்சயமாக அவர் தன்னுடைய நாட்களில் வருவார் என்று ஐரேனியஸ் நினைத்திருந்தார். காலங்களினூடாக எல்லாரும் பாலிகார்ப், பரிசுத்த மார்டீன், மற்றும் எல்லாரும் நினைத்தனர். ''நிச்சயமாக அது தான்'' என்று லூத்தரும் நினைத்தார். “இதுதான் அந்த சமயம்'' என்று வெஸ்லி கூறினார். ''இதுதான் அந்த நேரம் ” என்று சார்லஸ் ஃபின்னி, ஜான் நாக்ஸ், கால்வின் ஸ்பர்ஜியன், மற்றும் அவர்களில்

எல்லாரும் கூறினர். பில்லி சண்டேயிலிருந்து சரியாக இந்த நாள் வரைக்கும் ஒவ்வொரு வரும் “இதுதான் அந்த நேரம்!” என்று கூறுகின்றனர்.

53. நாமும் அதற்காக பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த நேரம் எப்பொழுது இருக்கும் என்பது நமக்கு தெரியாது. அது இந்த காலத்தில் தான் என்று நான் விசுவாசிக்கின்றேன், தீவட்டியை நான் பிடித்து வெளிச்சத்தை மேலே உயர்த்த நான் விரும்புகிறேன். ஆகவே கவனியுங்கள், நான்... சரியாக இதைப் பிடித்துக் கொள்ளுங்கள்! அடுத்த நிமிடத்திலே அவருக்காக நான் எதிர் பார்த்திருக்கிறேன் என்ற விதத்தில் என் வாழ்க்கையின் ஒவ்வொரு பொழுதும் நான் வாழ விரும்புகிறேன், ஆனால் இப்பொழுதிலிருந்து அது சம்பவிக்க பத்தாயிரம் ஆண்டுகள் ஆகும் என்கின்ற விதமாக நான் தொடர்ந்து என் ஊழியத்தை செய்து கொண்டிருக்க விரும்புகிறேன்.

இன்னுமாக நான் விதை களை விதைத்து அறுவடையை செய்ய விரும்புகிறேன். நான் சுவிசேஷத்தை பிரசங்கித்து நான் எப்பொழுதும் செய்த விதமாகவே தொடர்ந்து ஊழியம் செய்து கொண்டிருக்கவே விரும்புகிறேன். அதைப் போலவே என் கண்களை மேலே நோக்கியவாறே, கவனித்துக்கொண்டே இருப்பேன்; அந்த நெற்கட்டை இழுத்து... தானியக் கதிர்க்கட்டையும், அந்த நெல்லையும் எடுப்பேன். அதன் பிறகு அடுத்த ஆண்டில் மறுபடியுமாக நான் விதைத்து பயிர் செய்வேன், “கர்த்தாவே, கடந்த ஆண்டு நீர் இங்கே இருப்பீர் என்று நான் நம்பினேன், ஆனால் நீர் வரவில்லை யென்றால், இந்த வருடமும் நீர் வரலாம். ஆகவே என் பிள்ளைகளை வளர்க்கத்தக்க தாக நான் பயிர் செய்வேன். நீர் தாமதித்தால், உண்பதற்கென அவர்களுக்கு ஏதாவது இருக்கும்; நீர் வரவில்லையென்றாலும், நான் உமக்காக

நோக்கிக் காத்திருப்பேன்.'' புரிகின்றதா, பாருங்கள், இயல்பாக பணிகளை செய்து கொண்டேயிருங்கள்.

54. காலையில் அவர் வரப்போகிறார் என்று நான் எண்ணினாலும், இன்றிரவு இப்பொழுது நான் பிரசங்கித்துக்கொண்டிருக்கும் இதே செய்தியை நான் பிரசங்கித்துக் கொண்டிருப்பேன். அவர் காலையில் வரப்போகின்றார் என்று நான் நம்புகிறேன் என்றாலும், நான் வெளியே சென்று என் காரை விற்கமாட்டேன், இதை, அதை அல்லது மற்றதை நான் செய்யமாட்டேன். நான் சாதாரண மாக இருக்கின்றது போல அப்படியே நான் சென்று கொண்டிருப் பேன். ஏனெனில் அவர் வருவார் என்று ஒவ்வொரு கணநேரமும் நான் காத்திருக்கிறேன். ஏனெனில் அவர் உங்களுக்காக மாத்திரமே வரலாம், இன்றிரவு உங்களுடைய மணி நேரமாக இருக்கலாம். ஒருக்கால் இன்றிரவு

என்னுடைய மணி நேரமாக இருக்கலாம். எனக்குத் தெரியாது. ஆனால் அவைகளில் ஒன்று நம்முடைய மணி நேரமாக இருக்கப் போகின்றது. நான் இங்கே ஜீவித்துக் கொண்டிருந்தாலோ அல்லது அங்கே வெளியே நான் அடக்கம் பண்ணப்பட்டிருந்தாலும் கூட அது எந்தவித வித்தியாசத்தையும் உண்டாக்குமா? ஏற்கெனவே எனக்காக மரணத்துக்கான தண்டனை செலுத்தப்பட்டாயிற்று என்றிருக்குமானால், ஜீவித்துக் கொண்டிருக்கின்ற எந்த ஒரு மனிதனுக்கு முன்னதாகவே நான் அங்கே இருப்பேன். அது சரி. ''நான் இதைச் சொல்கிறேன்,'' எதெசலோனிக்கேயர், 5ஆம் அதிகாரம், கர்த்தரின் கற்பனைகளை முன்னிட்டு நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோ டிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வ தில்லை அல்லது தடை

செய்வதில்லை. ஏனெனில் தேவ எக்காளம் தொனிக்கும், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்'' , மரித்தவர்கள், சிலாக்கியம் பெற்றவர்கள் முதலில் வருவார்கள். அதன் மூலமாகத்தான் அக்காரியமானது அருகில் இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்கிறோம், பாருங்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, ஒரு நிமிஷத்திலே, ஒரு கண் (eye) இமைப்பொழுதிலே (ஆங்கில வேதத்தில் உள்ள வாறே - தமிழாக்கியோன்) மறுரூபமாக்கப்பட்டு, அவர்களோடே கூட ஆகாயத்தில்
எடுத்துக்கொள்ளப்படுவோம்.'' ஆகவே நான் நோவாவின் காலத்தில் மரித்திருந்தாலும், ஆபிரகாமின் காலத்தில் நான் மரித்திருந்தாலும், அப்போஸ்தலர் காலத்தில் நான் மரித்திருந்தாலும், இரண்டு வாரங்களுக்கு முன்ன தாக நான்

மரித்திருந்தாலும், அல்லது சரியாக இப்பொழுதே அது இருந்தாலும் என்ன வித்தியாசத்தை அது உண்டுபண்ணுகிறது? அது என்ன வித்தியாசத்தை உண்டாக்குகிறது? ஒரு நிமிஷத்திலே, ஒரு கண்ணிமைப் பொழுதிலே நான் அங்கே இருப்பேன், அந்த நேரம் வரைக்கும் நான் இளைப்பாறிக்கொண்டிருக்கிறேன்.

55. இப்பொழுது, கர்த்தரோடு அந்த ஒன்று கூடுதல் இருக்கும். யாக்கோபு 49வது அதிகாரத்தில், அவன், "சமாதான கர்த்தர் வருமளவும்.. நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்“'. அவன்- யூதாவைக் குறித்து பேசுகையில் இவ்விதம் கூறுகின்றான். இப்பொழுது அநேக மக்கள், ஒரு சபை, ஒரு ஸ்தாபனம், சபை பிரமாணம், ஒரு பெரிய மக்கள் கூட்டம் எடுத்துக் கொள்ளப்படுதலுக்காக ஒன்று சேர்க்கப்பட்டு எடுக்கப்படும் என்று

எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அது அவ்வாறாக அது இருக்காது. அது அல்லவே அல்ல. ஜனங்கள் ஒன்று கூட்டப்படுவது, தேவன் தம்முடைய மந்தையை ஒன்று கூட்டும் போது, அவர் ஜெபர்சன்வில்லில் இருந்து இரண்டு பேரையும், கெண்டக்கியிலிருந்து இரண்டு பேரையும், மிஸ்ஸிசிப்பியிலிருந்து இரண்டு பேரையும் எடுக் கலாம். சரியாக அவ்விதமாகத்தான் அவர் கூறியிருக்கிறார்; அந்த சொற்களல்ல, ஆனால் அவர், ''இரண்டு பேர் வயலில் இருப் பார்கள்'' என்று கூறியிருக்கின்றார், இப்பொழுது பகல் நேரமாக இருக்கின்றது, ''நான் ஒருவனை எடுத்துக் கொள்வேன், மற்றொரு வனை விட்டுவிடுவேன். படுக்கையில் இரண்டு பேர் இருப் பார்கள்" பூமியின் மற்றொரு பகுதியில் இரவு நேரமாக இருக்கும், "நான் ஒருவனை எடுத்துக் கொண்டு ஒருவனை விட்டு விடுவேன்''. பாருங்கள்?

56. மக்கள் ஒன்று கூட்டப்படுவது, இங்கே ஒரு குழுவாக எடுப்பதற்கு, கோத்திரத்தின்படி பிரிவாக இருக்காது. அது ஒரு உலகளாவிய உயிர்த்தெழுதலின் ஒன்று கூடுதலாக இருக்கும், எடுத்துக் கொள்ளப்படுதலும் அதே விதமாக வரும். ஏனெனில் அவர், "ஒருவன் அந்த மணி நேரத்தில் நித்திரையடைந்தான், மற்றொருவன் இந்த மணி நேரத்தில் நித்திரையடைந்தான்... அப்படியே ஏழாம் மணி வரைக்கும் இருந்தது. அதன் பிறகு மணவாளன் வந்த போது, அவர்களெல்லாரும், ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் கடைசி வரைக்கும் உள்ள அவர்கள் எல்லாரும் விழித்தெழுந்தனர். (Awaked) உள்ளே பிரவேசிக்க ஆயத்தப் படத்தக்கதாக அவர்கள் ஒவ்வொருவரும் விழித்தெழுந் தனர், (Awakened) அது சரி" என்று கூறினார். இப்பொழுது நீங்கள் பாருங்கள், அவருடைய வருகையின் போது மரித்தோர் எல்லாரும்

கல்லறையிலிருந்து எழுவார்கள் என்பதை அவர் காண்பிக்கின்றார், நீதிமான்கள், மணவாட்டி, கல்லறையில் நித்திரையில் இருந்தவர்கள் உயிர்த்தெழுதலில் எழுந்திருப்பார்கள். பிறகு பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள், இந்த இடத்திலிருந்து ஒருவர், அங்கிருந்து ஒருவர் என சேர்க்கப்படுவர் என்று அவர் காண்பிக்கின்றார் - ஒரு மக்கள் குழு ஒரு சிறிய குழுவாக ஒன்று கூட்டப்படமாட்டார்கள். ''வயலில் ஒருவன் இருப்பான் அல்லது இருவர் வயலில் இருப்பார்கள், நான் ஒருவனை எடுத்துக் கொண்டு மற்றவனை விட்டு விடுவேன்''. சபையைச் சார்ந்து ஒருவர் பகல் வெளிச்சத்திலிருந்து வருவார். பூமயின் மறுபுறத்திலிருந்து, “ படுக்கையில் இரண்டு பேர் இருப் பார்கள், நான் ஒருவனை எடுத்து ஒருவனை விட்டு விடுவேன்''. அது சரிதானே?

57. நான் ஜெபர்சன்வில்லில்லோ, அல்லது நான் ஸ்வீடன் நாட்டிலோ, அல்லது நான்... எங்கேயிருந்தாலும் ஒன்று கூட்டப் படுதலானது கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும், எந்த இடமாக இருந்தாலும் சரி, அந்த மேய்ப்பனுக்குள்ளாக ஒன்று கூட்டப் படுதலானது இருக்கும். பாருங்கள்? உயிருடன் இருப்பவர் உலகத்தின் எல்லா பாகங்களிலிருந்தும் வருவார்கள். கர்த்தரை ஆகாயத்தில் சந்திப்பதற்காக உயிர்த்தெழுதலுடன் நாமும் ஒன்றாக மேலே எடுக்கப்படுவோம். மரித்துப் போயிருக்கின்ற மக்கள் எழுந்திருப்பார்கள். கூடவே சபையும் (ஒன்றாக) கர்த்தரை ஆகயாத்தில் சந்திக்கத்தக்கதாக எடுத்துக் கொள்ளப்படும், பாருங்கள்? அவருடைய வருகையானது உலகளாவிய ஒன்றாக இருக்கலாம். லூயிவில்லுக்கு மாத்திரம் வருகின்ற ஒன்றாக அது இருக்காது. பாப்டிஸ்ட், பிரஸ்பிடேரியன் மாத்திரமே

வருகின்ற ஒன்றாக அது இருக்காது. அது "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனை தரிசிப்பார்கள்" என்பதாக இருக்கும், ஆகவே உயிர்த்தெழுதலும் மற்றும் ஒன்று கூட்டப்படுதலும் எல்லா இடங்களிலும் இருந்து வருகின்றதாக இருக்கும். மேலும், அது எப்பொழுது சம்பவிக்கும்? ஒருக்கால் இன்றிரவாக இருக்கலாம், ஒருக்கால் நாளைய தினத்தில் இருக்கலாம், ஒருக்கால் நூறு வருடம் கழிந்து இருக்கலாம், ஒருக்கால் மேலும் ஆயிரம் வருடங்கள் பிறகு இருக்கலாம். எனக்கு தெரியாது. யாருக்குமே தெரியாது. ஆனால் நீங்கள் மற்றும் நான், இன்றிரவு அது சம்பவிக்கப் போவது போல நாம் ஜீவிப்போமாக.

58. ஆனால், இப்பொழுது, ''எனக்கு ஒரு அறுவை சிகிச்சை செய்யப்படவிருக்கின்றது'' என்று நீங்கள் கூறுவது போல. நல்லது, உங்களுக்கு ஒரு அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டி இருக்க, விடுதலைக்கென உங்களுக்கு

விசுவாசம் இல்லாதிருக்கும் பட்சத்தில் உங்களுக்கான அறுவைச் சிகிச்சையைச் செய்துக் கொள்ளுங்கள். நான் ஒன்றை வாங்க வேண்டியவனாக இருப்பேனானால்... யாரோ ஒருவர் வந்து அன்றொரு நாளிலே ஒரு குறிப்பை எனக்கு எழுதினார், ஒரு- ஒரு பெரிய கடிதம், இவ்விதமாக கூறினார், "சகோதரன் பிரன்ஹாம், நான் என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. நானும் என் மனைவியும் எங்களால் முடிந்த வரைக்கும் தேவனுக்கு மிகவும் உத்தமமாக இருந்து வருகிறோம். எங்கள் பிள்ளைகளை நாங்கள் வளர்த்துள்ளோம். இப்பொழுது என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். நாங்கள் பணம் சேமித்து ஒரு பண்ணையை வாங்கியுள்ளோம். அதை எவ்வளவாக நாங்கள் நேசிக்கிறோம் தெரியுமா! அங்கே பண்ணையில் ஒரு நீரூற்று உள்ளது; அந்த நிலம் முழுவதுமாக ஒரு நீரோடை

ஓடுகிறது. ''அது அங்கே ஓரிகானில் இருக்கின்றது. மேலும் அக்கடிதத்தில், ''நீங்கள் ஓரிகானுக்கு வருவதாக நாங்கள் கேள்விப்படுகிறோம். என்ன செய்யவேண்டுமென்று நாங்கள் தீர்மானித்துள்ளதை நான் உங்களிடம் கூறுகிறேன். நாங்கள்... பிள்ளைகளுக்கு பண்ணை உபயோகமாக இருக்குமென்று எண்ணி சேமித்து வாங்கினோம், ஏனெனில் அவர்களில் யாருமே கிறிஸ்த வர்கள் அல்ல. இப்பண்ணையை பிள்ளைகளுக்கு வைத்துப் போகலாம் என்று எண்ணினோம். ஏனெனில் அவர்கள் இப்பூமியி லேயே இருந்து உபத்திரவத்துக்குள்ளாக வருவதற்கு பிள்ளை களுக்கென சேமித்து வைத்தோம், ஏதோ ஒன்று அவர்களுக்காக இருக்கட்டும் என்று நாங்கள் பார்த்தோம், ஏனெனில் நாங்கள் எடுத்துக் கொள்ளப்படுதலில் இருப்போம் என்று விசுவாசிக் கிறோம். ஆகவே அதைக் குறித்து என்ன

செய்தென்று எங்களுக்கு தெரியவில்லை, ஆகவே நீங்கள் வரும் போது நீங்கள் பார்க்கத்தக் கதாக பண்ணையை உங்களுக்கு திறந்து விடுகிறோம், நீங்கள் பாருங்கள், பிறகு அதைக் குறித்து நீங்கள் எது வேண்டுமானாலும் கூறலாம்'' என்று எழுதப்பட்டிருந்தது. நான் திரும்பி பதில் எழுதினேன், ''உங்கள் பிள்ளைகளைக் குறித்து இவ்வளவு அக்கறையுள்ளவர்களாக இருப்பது எவ்வளவு நலமான ஒன்று'' என்று எழுதினேன். “நானும் தாயும் மாலை வேளையில் அங்கே செல்கிறோம். நான் ஓய்வு பெற ஆயத்தமாக இருக்கிறேன், எங்களுக்கு இருக்கின்ற அருமையான மகிழ்ச்சி மிக்க தருணங்கள், பண்ணையில் நடந்து செல்வது, நீரூற்றை பார்த்துக் கொண்டிருப்பது, அங்கே நின்று கொண்டு தேவனை ஸ்தோத்தரித்துக் கொண்டிருப்பது என்பது” என்று கடிதத்தில் இருந்தது. நான், 'அவ்விதம் தொடர்ந்து

செய்து கொண்டேயிருங்கள், சரீரப்பிரகாரமாகவும், பொருள் பிரகாரமாகவும் அந்த விதமாகவே ஜீவியுங்கள். அவர் வந்து முன் தோன்றுகின்ற வரையிலும் அப்படியே செய்து கொண்டேயிருங்கள்'' என்றேன். திட்டமிடுங்கள், தொடர்ந்து செய்யுங்கள், அதைச் செய்யுங் கள், ''கர்த்தருக்கு சித்தமானால்! கர்த்தருக்கு சித்தமானால்! இதை நான் செய்வேன், கர்த்தருக்கு சித்தமானால்.'' அந்த நேரத்திற்கு முன்னதாகவே அவர் வரலாம் (ஒலி நாடாவில் காலியிடம்- ஆசி) அப்படியே தொடர்ந்து செய்து கொண்டே இருங்கள்.... ஆனால் உங்கள் ஆத்துமாவை சீர் நிலையில் ஒழுங்குப்படுத்தி வைத்திருங் கள், ஏனெனில், எந்த நிமிடத்திலும் அவர் வரலாம். பாருங்கள், ஆயத்தமாக இருங்கள். ஏனெனில், நீங்கள் பாருங்கள், அவர் உங்களுக்காக எந்த ஒரு நிமிடத்திலும், எந்த நொடியிலும், அடுத்த

இதய துடிப்பின் போது, அடுத்த மூச்சின் போதும் வரலாம், அவர் உங்களுக்காக வரலாம். நீங்கள் செய்ய விரும்பும் எதையும் தொடர்ந்து செய்து கொண்டேயிருங்கள், அது உண்மை யானதாகவும், வரம்பு மீறாத ஒன்றாகவும், நேர்மையுடைய தாகவும் இருக்குமானால் தொடர்ந்து அதைச் செய்யுங்கள்.



# லீலிப்புஷ்பமும் அதை இலவசமாகத் தருகின்றன



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# மத்தேயு 6:28-30

28. உடைக்காகவும் நீங்கள்
கவலைப்படுகிறதென்ன? காட்டுப்
புஷ்பங்கள் (the lilies of the field)
எப்படி வளருகிறதென்று
கவனித்துப்பாருங்கள்; அவைகள்
உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை;
29. என்றாலும், சாலொமோன் முதலாய்
தன் சர்வ மகிமையிலும் அவைகளில்
ஒன்றைப்போலாகிலும்
உடுத்தியிருந்ததில்லை என்று,
உங்களுக்குச் சொல்லுகிறேன்.
30. அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு
இருந்து நாளைக்கு அடுப்பிலே
போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன்
இவ்விதமாக உடுத்துவித்தால்,
உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக
நிச்சயமல்லவா?

இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

## செய்தி: 62-04-01 விசுவாசமும் அதற்கெதிரான அறிவுக்கூர்மையும்

349. லீலிப்புஷ்பம் மிகவும் பிரயாசப் படுகின்றது.

திரு. லீலியைக் குறித்து சிறிது காலம் முன்னர், சில வருடங்களுக்கு முன்னர் நான் பிரசங்கித்த என்னுடைய செய்தி உங்களுக்கு நினைவில் இருக்கும்.

“அது நூற்கிறதுமில்லை, என்றாலும் சாலமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அதைப் போன்றதாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்கு நான் சொல்லுகிறேன்".

அந்த லீலிப்புஷ்பம் தன்னை அழகாக்கிக் கொள்ள எப்படி அது வளர்ந்து வெளிவருகின்றது. எதற்காக? அது வெளியே காண்பிக்கப்பட வேண்டும் என்பதற்காக. (சகோதரன் பிரன்ஹாம் முகர்ந்து பார்க்கும் சத்தத்தைப் பிறப்பிக் கின்றார் - ஆசி) அது நறுமணத்தை வெளியே பரப்பத்தக்கதாக வெளியே வருகின்றது.

தேனீக்கள் நேராகப் பறந்து அதனு டைய இருதயத்திற்குள் வந்து அதற்குள் இருக்கும் தேனை எடுத்துச் செல்கின்றன.

லீலிப்புஷ்பமும் அதை இலவசமாகத் தருகின்றன.

அந்த தேனைப் பிறப்பிக்க அது பாடு படுகின்றது!

அல்லேலூயா, அப்படித்தான் ஒரு உண்மையான தேவனுடைய மனிதனும் இருப்பான்.

பாஸ்டர் லீலி, சங்கை திரு. லீலி (ஆமாம் ஐயா!), வார்த்தையில் கடுமை யாக உழைத்து, முகங்குப்புற விழுந்து தேவனை நோக்கி, “தேவனே இந்த வசனம் எங்கே பொருந்துகின்றது. இங்கே பொருந்துகின்றதா என்பதை என்னால் காண முடியவில்லையே” என்று கூப்பிடும். அது தேவனுடைய வார்த்தையின்படியே தான் வரும்.

தேவன் அதை அளித்து அதை நீங்கள் காணும் போது, இலவசமாக அதை அளி யுங்கள்; ஏதோ ஒரு பெரிய கன்வென்ஷன் கூட்டத்தை நடத்த, 'எனக்கு இவ்வளவு ஆயிரம் டாலர்கள் தருவீர்களென்று

உறுதியளித்தால் தான் நான் வருவேன்" என்றல்ல.

ஆனால் இலவசமாக “அது டிம்புக்ட்டு (Timbuktu) (ஆப்பிரிக்காவில் சஹாரா பாலைவனம் அருகில் இருக்கும் ஒரு இடம் - தமிழாக்கியோன்) ஆனாலும் அல்லது எங்கிருந்தாலும் சரி, தேவனே எங்கெல்லாம் நான் விதையை விதைக்க வேண்டுமென்று நீர் விரும்புகிறீரோ அங்கெல்லாம் சென்று இலவசமாக இதை நான் அளிப்பேன்.” - அல்லேலூயா.

350. இயேசு “சாலோமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அதைப் போன்றாகிலும் உடுத்தியிருந்ததில்லை” என்று கூறினார்.

“லீலிப்புஷ்பத்தை (lilies) பாருங்கள்”, அந்த பரிதாபத்திற்குரிய ஆள், தான் பெறவிருக்கின்ற ஒவ்வொன்றிற்காகவும்

அது பிரயாசப்பட வேண்டியிருக் கின்றான். பரியாசம் செய்யப்படுகிறான். ஏளனமாக சிரிக்கப்படுகின்றான். மேலும் எல்லா மதசம்பந்தமானவைகளாலும் எட்டி உதைத்துத் தள்ளப்படுகின்றான். எல்லா விதமான அவப்பெயர்களாலே அழைக்கப் படுகின்றான்.

ஆனாலும் அவன் தேவனுடைய வார்த்தையுடன் தரித்து நிற்கின்றான். இரவும் பகலும் பாடுபட்டு உழைக்கின் றான். பள்ளத்தாக்கில் கிடக்கின்றான். ஆம்.

அந்த லீலி இருக்கின்ற இடத்திலிருந்து நீர்க்கால்களில் ஓரத்திலிருந்து தண்ணீரை எடுக்கின்றது.

எதற்காக அது பாடுபடுகின்றது? மற்றவர்களுக்கு அளிக்கும் படியாகத்தான். “இலவசமாய்ப் பெற்றீர்கள். இலவசமாய்க் கொடுங்கள்,'' ஆம், ஐயா, ஓ, என்னே,

எவ்விதமாக அது மதசம்பந்தமான கற்பாறையில் இருக்கின்ற அந்த தூசியில் வளரும்!



அது தன்னைத் திறந்து கொடுக்கிறது, அவைகள் அதனிடம் வந்து பெற்றுக் கொள்கின்றன. வண்டும் தேனீயும் - நல்லதும், கெட்டதும் இவையனைத்தும் - அங்கு வந்து அதனிடமிருந்து பெற்றுக் கொள்கின்றன. அப்படித்தான் கிறிஸ்துவின் ஊழியக்காரனும் இருக்கிறான். அவன் தன்னைத் திறந்து கொடுத்து, “உலகமே, என்னிலிருந்து எடுத்துக் கொள்" என்கிறான். அவனுக்கென்று ஒன்றுமில்லை, எல்லாம் மற்றவர்க்கே.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# மத்தேயு 6:28-30

28. உடைக்காகவும் நீங்கள்
கவலைப்படுகிறதென்ன? காட்டுப்
புஷ்பங்கள் (the lilies of the field)
எப்படி வளருகிறதென்று
கவனித்துப்பாருங்கள்; அவைகள்
உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை;
29. என்றாலும், சாலொமோன் முதலாய்
தன் சர்வ மகிமையிலும் அவைகளில்
ஒன்றைப்போலாகிலும்
உடுத்தியிருந்ததில்லை என்று,
உங்களுக்குச் சொல்லுகிறேன்.
30. அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு
இருந்து நாளைக்கு அடுப்பிலே
போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன்
இவ்விதமாக உடுத்துவித்தால்,
உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக
நிச்சயமல்லவா?

**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: 60-1002 இனத்தான் மீட்பர்

---

தேவன் நம்முடைய இனத்தானாகி, கீழே இறங்கி வந்து, நம்மைப் போல ஒருவராகி, மானிட சரீரம் பூண்டு, பசிதாகமுற்றார். "தாகமாயிருக்கிறேன், எனக்குத் தண்ணீர் கொடுங்கள்.'' அவர்கள் கசப்பு கலந்த காடியை அவருக்குக் குடிக்க கொடுத்தார்கள். அவருக்கு நம்மைப் போல் தாகமெடுத்தது. குடிக்கத் தண்ணீர் இல்லாமல் இருக்க அவர் அறிந்து கொண்டார். அவர் நம்மைப் போல் வியாதிப்பட்டார். அவர் "வைத்தியனே, உன்னை குணமாக்கிக் கொள்" என்னும் பழமொழியை என்னிடம் அவர்கள்

கூறமாட்டார்களா? என்று கேட்டார். அவருடைய மகத்தான வல்லமைகள் அவருக்காக அல்ல. அதை செய்ய அவருக்கு வல்லமை இருந்தது. ஆனால் அதை அவர் தமக்கென உபயோகித்துக் கொள்வதில்லை. இல்லை.

81. அன்றொரு நாள் ஒருவர் என்னிடம், ''சகோ. பிரான்ஹாமே, ஏதாவதொன்று நடப்பதற்கு முன்பே, அதைக் குறித்து நீர் எல்லாவற்றையும் அறிந்து கொள்கிறீர். உமக்கு என்ன நடக்கும்?'' என்று கேட்டார். நான், ''அந்த வரம் எனக்கல்ல. அதை எனக்காக உபயோகப் படுத்திக் கொள்ள முடியாது'' என்றேன். அது உங்களுக்கே. நீங்கள் தான் அதன் நன்மையை பெறுகின்றீர்கள், நான் அல்ல. நான் உங்களுக்கு தேவனுடைய பொது ஜன ஊழியக்காரன் மாத்திரமே. போதகர் ஒரு பொது ஜன ஊழியன். அவன் லீலிப்

புஷ்பத்தை போல் அதில் நிலைத்திருக் கிறான். வண்டு அங்கு வந்து அதற்கு வேண்டியதை எடுத்துக் கொள்கிறது. தேனீ அங்கு பறந்து வந்து அதற்கு வேண்டியதை எடுத்துக் கொள்கிறது. வழிப் போக்கன் தனக்கு வேண்டியதை எடுத்துக் கொள்கி றான். லீலிப் புஷ்பம் தன் பிரகாசத்தை காத்துக் கொள்ள இரவும் பகலும் உழைக் கிறது. சுவிசேஷ ஊழியனும் அதையே செய்கிறான். அவன் தேவனுடைய வரிசை யில் நடந்து சென்று, உலகம் தன்னிடம் பங்கு கொள்ள, தன் சாட்சியை காத்துக் கொள்கிறான். பாருங்கள், திரு. போதகர் லீலிப் புஷ்பம், மிகவும் நல்லவர். இயேசு, ''அதைக் கவனித்துப் பாருங்கள். சாலோ மோனும் கூட அதைப் போல இல்லை'' என்கிறார். அது உண்மை. டாக்டர் லீலிப் புஷ்பம், அவரை நீங்கள் எல்லோரும்

அறிந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். பாருங்கள்?

82. “லீலீப் புஷ்பங்களை கவனித்துப் பாருங்கள், அவை எப்படி கடுமையாக உழைக்கின்றன. என்றாலும் சாலோமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும்... லீலிப் புஷ்பம் தன் பிரகாசத்தைப் பெற்றுக் கொள்ள, தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ள, தன் நறுமணத்தை காத்துக் கொள்ள, இரவும் பகலும் பாடுபட வேண்டியதாயுள்ளது. மற்றவை. அது தன்னைத் திறந்து கொடுக்கிறது, அவைகள் அதனிடம் வந்து பெற்றுக் கொள்கின்றன. வண்டும் தேனீயும் - நல்லதும், கெட்டதும் இவையனைத்தும் - அங்கு வந்து அதனிடமிருந்து பெற்றுக் கொள்கின்றன. அப்படித்தான் கிறிஸ்துவின் ஊழியக்காரனும் இருக்கிறான். அவன் தன்னைத் திறந்து கொடுத்து, ''உலகமே, என்னி

லிருந்து எடுத்துக் கொள்'' என்கிறான். அவனுக்கென்று ஒன்றுமில்லை, எல்லாம் மற்றவர்க்கே. கிறிஸ்துவும் நம்முடைய இனத்தான் ஆனபோது அப்படித்தான் ஆனார். உலகம் அவருடைய நீதியில் பங்கு கொண்டு, பாருங்கள், தேவனுடைய குமாரர்களாக வேண்டும் என்பதற்காக அவர் மனிதனானார்.



**உயிர்த்தெழுதல் நிகழும். அப்பொழுது நாம் அவர்களுடன் கூட எடுத்துக் கொள்ளப்படுவோம். ஒரு சிலர் மாத்திரமே பாருங்கள்! எனவே உங்கள் இரட்சிப்பை நீங்கள் உடனே தேடுங்கள். உங்களை நீங்கள் ஆராய்ந்து, தவறு எங்கு நேர்ந்துள்ளது என்பதை அறிந்து கொள்ளுங்கள். பாருங்கள்? என்ன காரியம் என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# மத்தேயு 6:28-30

28. உடைக்காகவும் நீங்கள்
கவலைப்படுகிறதென்ன? காட்டுப்
புஷ்பங்கள் (the lilies of the field)
எப்படி வளருகிறதென்று
கவனித்துப்பாருங்கள்; அவைகள்
உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை;
29. என்றாலும், சாலொமோன் முதலாய்
தன் சர்வ மகிமையிலும் அவைகளில்
ஒன்றைப்போலாகிலும்
உடுத்தியிருந்ததில்லை என்று,
உங்களுக்குச் சொல்லுகிறேன்.
30. அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு
இருந்து நாளைக்கு அடுப்பிலே
போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன்
இவ்விதமாக உடுத்துவித்தால்,
உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக
நிச்சயமல்லவா?

இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

---

## செய்தி: 60-0522M புத்திரசுவிகாரம், பாகம் - 3

---

48. நீங்கள் தொடர்ந்து, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தை ஞானஸ்நானத்தில் உபயோகித்து வருகின்றீர்கள். அதற்கு வேதத்தில் ஒரு சிறிய ஆதாரமும் கூட கிடையாது. ''பிதா, குமாரன், பரிசுத்தஆவி நாமத்தினால் வேதத்தில் யாராகிலும் ஞானஸ்நானம் பெற்றனரா என்று தலைமை பேராயர் ஒருவராவது எனக்குக் காண்பிக்கட்டும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலன்றி வேறெதாவது முறையில் வேதத்தில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதா என்று யாராகிலும்

ஒருவர் என்னிடம் காண்பிக்க வேண்டு மென்று விரும்புகிறேன். யோவான் ஸ்நானன் அம்முறையில் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. இயேசு வரப் போகிறார் என்று விசுவாசித்து அவர்கள் ஞானஸ் நானம் பெற்றனர். ஆனால் அவர் யாரென்று அவர்கள் அறிந்து கொள்ள வில்லை. அதை கண்டுகொண்டவுடன், அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் மறுபடியும் ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிற்று. யாராகிலும் ஒருவர்... நான் தேவ சபை (Assemblies of God)யினரைக் கேட்டுப் பார்த்துவிட்டேன்; பிரஸ்பிடேரியன் சபை போதகர்களையும் கூட, ஆனால் அவர்களோ அதைக் குறித்து மௌனமாயுள்ளனர். அதற்கு ஆதாரமா யுள்ள வேத வாக்கியத்தை நான் காண விரும்புகிறேன். அவர்கள் என்னை, “மூடபக்தி வைராக்கியமுள்ளவன்'',

''பைத்தியக்காரன்'', ''புத்தி சுவாதீனமில்லா தவன்”, என்றெல்லாம் அழைக்கின்றனர். ஏன்? உங்களுக்கு நான் சத்தியத்தை எடுத்துக் கூற முனைவதனாலா? சகோ தரரே, அது உண்மை. ஒரு மனிதன் தன்னை முற்றிலுமாய் தேவனுக்கு அர்ப் பணிக்கும் போது, அவன் அவருக்கென்று தனியே ஒதுக்கப்படுகின்றான். அப்பொ ழுது நீங்கள் வித்தியாசமான சிருஷ்டிக ளாகின்றீர்கள்.

49. அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர். அநேகர் அழைக்கப்பட்டனர். உங்களுக்கு இருதயத்தில் ஒரு அழைப்பு ஏற்படு கின்றது. ''ஆம், தேவன் என்னை நேசிக் கிறார் என்று விசுவாசிக்கிறேன். அவர் என்னை நேசிக்கிறார் என்று விசுவாசிக் கிறேன்.'' ஆனாலும் சகோதரனே, நீயும் மற்றவர்களைப் போல் அதை

இழந்துவிடப் போகின்றாய். ஏனெனில் அவர்கள் அந்நாளில் வந்து, “கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோமே. உமது நாமத்தினாலே நாங்கள் எல்லாவற்றையும் செய்தோமே. நாங்கள் சுகமளிக்கும் ஆராதனைகளை நடத்தினோமே, நாங்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தோமே, நாங்கள் பிசாசுகளைத் துரத்தினோமே'' என்பார்கள். அப்பொழுது இயேசு, “மாய்மாலக்காரரே, என்னை விட்டு - அகன்று போங்கள். நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிற வனை மாத்திரமே நான் அறிந்திருக் கிறேன்'' என்பார். ஜனங்களால் ஏன் அதை புரிந்து கொள்ள முடியவில்லை? அது உங்களை உறுத்துகிறது என்று எனக்குத் தெரியும். உங்களைப் புண்படுத்த

வேண்டும் என்பதற்காக அல்ல. ஆனால் சகோதரனே, நான் - நான்...

50. நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம் என்று எனக்குத் தோன்றுகிறது. தேவன் சுவிகாரப் புத்திரராக்கிக் கொண்டு, சபையை கிறிஸ்துவின் சரீரத்தில் அதன்தன் ஸ்தானத்தில் பொருத்துகின்றார். அவர் அநேகரை அதில் பொருத்துவதுமில்லை. அதை ஆரம்பத்திலேயே உங்களிடம் கூறிவிடுகின்றேன். ''அங்கு திரளான பேர் இருப்பார்கள்'' என்று நீங்கள் கூறலாம். ஆனால் அவர்களை வெளியே இழுப்பதற்கு அவருக்கு ஆயிரம் ஆண்டுகள் இருந்தன. உயிர்த்தெழுதல் நிகழும். அப்பொழுது நாம் அவர்களுடன் கூட எடுத்துக் கொள்ளப்படுவோம். ஒரு சிலர் மாத்திரமே பாருங்கள்! எனவே உங்கள் இரட்சிப்பை நீங்கள் உடனே தேடுங்கள். உங்களை நீங்கள் ஆராய்ந்து, தவறு எங்கு

நேர்ந்துள்ளது என்பதை அறிந்து கொள் ளுங்கள். பாருங்கள்? என்ன காரியம் என்பதைக் கண்டு கொள்ளுங்கள். சகோ தரனே, அது மிகவும் கடினம். ஆனால் அது உண்மை. அது தேவனுடைய சத்தியம். புத்திரசுவிகாரம்!

51. நாம் தேவனுக்காக மிகுந்த அனல் கொண்டவர்களாய், இரவும் பகலும் சென்று கொண்டேயிருக்க வேண்டும். ஒன்றுமே நம்மை தடுத்து நிறுத்தக் கூடாது. நாம் மிகவும் இனிமையாகவும், அன்பா கவும், தயவாகவும், கிறிஸ்துவைப் போலவே நமது வாழ்க்கையில் காணப்பட வேண்டும். நமது அன்றாட வாழ்க்கை அவ்வாறு அமைந்திருக்க வேண்டும். இயேசு கூறினார்: ''காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறது மில்லை, நூற்கிறதுமில்லை, என்றாலும்

சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை." சாலொமோன் அழகான சித்திரத்தைய லாடை கொண்ட பட்டாடைகளை உடுத்தி யிருந்தான், ஆனால் இயேசு அதை இங்கு குறிப்பிடவில்லை. ஒரு லீலிப் புஷ்பம் வளர வேண்டுமானால் அது இரவும் பகலும் உழைக்க வேண்டும். இந்த ஜெப வரிசையின் கடைசியில் நின்று கொண்டு நீங்கள் முன்னால் வர விரும்பும் காரணம் என்ன? நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவி யும் (அதாவது அவிசுவாசி) எங்கே நிற்பான்? - அதாவது தேவனுடைய வார்த்தையைக் கேட்டும் அதன் வழியில் நடக்க மறுக்கிற மனிதன். நாம் என்ன செய்யப் போகிறோம்? பாருங்கள்?

# அது தேவனுடைய புத்தகம்



**Bro. Branham:**

நீங்கள் யாரென்றும், நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்றும், நீங்கள் என்னவாயிருக்கிறீர்கள் என்றும், நீங்கள் எங்கு செல்கிறீர்கள் என்றும் உங்களுக்கு எடுத்துரைப்பதற்கு உலகில் ஒரே ஒரு புத்தகம் மாத்திரமேயுண்டு. அதுதான் வேதாகமம். அது ஒன்று மாத்திரமே உங்களுக்கு அறிவிக்கிறது. அது தேவனுடைய புத்தகம்.

Message: 64-03-06, சாலொமோனிலும் பெரியவர் இப்பொழுது இங்கே இருக்கிறார்

## சகோ. பிரன்ஹாம்:

மற்றவர்கள் பெரியவர்களாக ஆக தேவன் அனுமதிப்பார், ஆனால் உங்களையோ தாழ்ந்தவர்களாகவே வைத்திருப்பார். மற்றவர்கள் அவருக்கு ஒரு பணி செய்து, அதற்கான நன்மதிப்பைப் பெற அனுமதிப்பார். ஆனால் நீங்களோ அவருக்காக உழைத்து பாடுபடும்படி செய்து, நீங்கள் எவ்வளவு அவருக்காக செய்திருக்கிறீர்கள் என்பதையும் கூட அறியாமலிருக்கும்படி செய்து விடுவார். உங்கள் உழைப்பை இன்னும் அதிக விலையுயர்ந்ததாகச் செய்ய, நீங்கள் செய்த வேலைக்கு மற்றவர்கள் நன்மதிப்பை பெறும்படி செய்வார். இயேசு வரும்போது, அது உங்களுக்கு கிடைக்கவிருக்கும் பலனை பத்து மடங்கு அதிகரிக்கும்.

—உன்னத அழைப்பு

# நீங்கள் எதை வாசிக்கிறீர்களோ அதுதான் உங்களுடைய குணாதிசயத்தை உருவாக்குகிறது

~~~~~~~~~~~~~

ஆனால் நான் இதை வாலிப பிள்ளைகளிடம் கூறியாக வேண்டும். ஆபிரகாம் லிங்கன் தாம் 21 வயதைக் கடப்பது வரையில் தம்முடைய ஜீவியத்திலேயே வேதாகமத்தையும், ஃபாக்ஸ் எழுதிய இரத்தசாட்சிகளின் புத்தகத்தையும் தவிர வேறு எந்த புத்தகத்தையும் ஒருபோதும் சொந்தமாகக் வைத்திருக்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? பாருங்கள்? நீங்கள் எதை வாசிக்கிறீர்களோ அதுதான் உங்களுடைய குணாதிசயத்தை உருவாக்குகிறது (**molds**)!

*செய்தி: தாய்மார்களின் தினம்*

~~~~~~~~~~~~~

But I might pass this on to the young people. Do you know Abraham Lincoln never owned a book in his life, until he was after twenty-one years old but the Bible and the Foxe "Book Of The Martyrs." See? what you read molds the character that you are.

MOTHER'S.DAY_ JEFF.IN V-25 N-1 SUNDAY_ 59-0510M

# வேதாகம விளக்கவுரை

1



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து